[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜுன் 14

உ) இரண்டு தனியார் பட்டு முறுக்கேற்றும் அலகுகளும், ஒரு அரசு பட்டு முறுக்கேற்றும் அலகும் நிறுவிட 10 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொண்டு, அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வேளாண்மைத் துறை மற்றும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் மானம் காக்கும் மகத்தான துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை. கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்க பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கைத்தறி துணிகளை தன் தோளில் சுமந்து கூவிக் கூவி விற்றார்கள் என்பது கைத்தறித் துறைக்கு கிடைத்திருக்கிற மகத்தான ஒரு வரலாறு. அதேவழியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தொடர்ந்து கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க வேண்டும் என்பதற்காக பல்வேறு மகத்தான திட்டங்களை வழங்கி, சிறப்புச் செய்திருக்கிறார்கள் என்பது வரலாறு. அதேவகையில் நெசவாளர் பெருமக்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கவேண்டும் என்பதற்காக கைத்தறி, பெடல் தறி, விசைத் தறி என்று முக்கனியாக சிறப்பான அறிவிப்புகளைத் தந்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு, பேரவை விதி 110–ன்மூலம் நெவாளர்கள் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதா இல்லத்தின் ஞான ஒளி, சிப்பிக்குள் தவமிருந்து பிறந்த நல்முத்து, எட்டு கோடி தமிழினத்திற்குப் பணி செய்து மெழுகாய் கரைந்திட்ட, பூமிக்கு வந்துபோன புண்ணிய வடிவத்தின் மொத்த உருவம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) *வேளாண்மை செழித்து, விவசாயிகள் வாழ்வாதாரம் மேம்பட வியூகம் வகுத்து, விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்ற சோலார் பம்ப்செட்டுகள், விவசாயிகள் வளம் காண சிறுதானிய பயிர்கள் சிறப்புத் திட்டம், வாடிய செடிகளுக்கு நுண்ணீர் பாசனம், காய்கறி பயிரிடுதலில் உயிரி தொழில்நுட்பம், மாணவர்களுக்கு மகிழ்ச்சி தர மருத்துவமையத்தில் தோட்டக் கலை பட்டய படிப்பு, துறையை மேம்படுத்தி விரிவாக்க மையங்கள், மலைகளின் இளவரசிக்கு மெடோஸ் பூங்கா* (Meadows Park), *ரோஜா பூங்காவில் வாகன நிறுத்தம் என நவரத்தினங்களாக 9 வியத்தகு திட்டங்களை 127 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் வாரி வழங்கிய வள்ளல், இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் என்னும் புரட்சித் தலைவி அம்மாவின் கனவை நனவாக்கிய, ஓராண்டில் நூறாண்டு சாதனை படைத்த, காவிரியை மீட்டெடுத்த கரிகாலன், குடிமராமத்து நாயகன், விவசாயிகளின் கலங்கரை விளக்கம், சேலம் தந்த தங்கம், பாசமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என் சார்பிலும், விவசாயிகள் சார்பிலும் நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வெண்பட்டு உற்பத்தியில் நாட்டிலேயே முதன்மை நிலையில் இருந்துவரும் நிலையில், வெண்பட்டு முட்டை உற்பத்தியை அதிகரித்திடும் வகையில் 150 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வெண்பட்டு முட்டைகள் பதனம் செய்யும் பல்நிலை குளிர்பதன அலகு அமைக்கப்படுமென்று அறிவித்தமைக்கும், தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட அரசின் பங்காக 243.98 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியமைக்கும், பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவிட மாநில அரசின் பங்காக 10.04 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளித்தமைக்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா*

அவர்கள் வழியில் பட்டு விவசாயிகள் நலன் காத்திட தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது சார்பிலும், துறையின் சார்பிலும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. தகவல் கோரல்

(அ) ஸ்டெர்லைட் ஆலை குறித்து மதுரை உயர் நீதிமன்றத்தின் கருத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை குறித்து நேற்றையதினம் உயர் நீதிமன்றத்தினுடைய மதுரை கிளையில் உள்ள நீதிபதிகள் சில கருத்துகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடப்போகிறோம் என்ற ஓர் அரசாணையை ஏற்கெனவே இந்த அரசு வெளியிட்டிருக்கிறது. ஆக, இந்த ** நியாயமாக, உளப்பூர்வமாக அதை மூடிவிட வேண்டுமென்று அரசு கருதுமென்று சொன்னால், கொள்கை முடிவை குறிப்பாக அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி. . .*

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். இதுகுறித்து நீங்கள்* zero hour–ல் raise *செய்வது குறித்து சபை நடத்துவதில் எனக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகள் குறித்து உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது மதுரை உயர் நீதிமன்றக் கிளை சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறது. (குறுக்கீடு) அதனால்தான் நீங்கள் சொல்வது வரையிலும் நான் பொறுமையாக இருந்தேன். அந்தக் கருத்துகளின் அடிப்படையில் மேற்கொண்டு என்ன விவரம் என்பதை அரசு தெரிவிப்பதற்கு மதுரை உயர் நீதிமன்றக் கிளை வழக்கை திரும்பவும் 22 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்திருக்கிறது.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*